## இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் - 2016

--------------------------------------------------------------------------------

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான, செலவினக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

--------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் போதியளவு தவறான் கூற்றினாலான ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் பரப்பெல்லையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தினை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி நடவடிக்கைகளும் காசுப்பாய்ச்சலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்களில் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் செலவழிக்கப்பட்ட ரூபா 30,000 மீளாய்வண்டினது செலவினமாகக் கணக்கிலிடப்பட்டதால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய அங்கத்தவர்களது கட்டணம் ரூபா 154,500 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதும், அங்கத்தவர்களது கட்டண நிலுவைப் பதிவேட்டில் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 277,500 என இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய, குறித்த வழுவைச் சீராக்குவதற்கு திரண்ட நிதியத்தில் ரூபா 123,000 செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 119,500 செலவு வைக்கப்பட்டமையால் திரண்ட நிதிய மீதி ரூபா 3,500 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தொழிற்படு மூலதன அசைவுகளின் கீழ் சுட்டிக் காட்டப்பட்ட பெற வேண்டிய சொத்துக்களது அதிகரிப்பு ரூபா 398,500 ஆகவேண்டியபோதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அதனை 279,000 ஆகக் காட்டியமையால் காசுப் பிரவாகம் ரூபா 119,500 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தால் நிறுவகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்று சகல நிதியாண்டின் பொருட்டும் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், அவ்வறிக்கையானது கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களுடன் அடுத்து வரும் ஆண்டின் 6 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் செயலாளருக்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சுதந்திர சமூக சேவைகள் ஒழுங்கமைப்பு (பதிவு செய்தலும் மேற்பார்வையிடலும்) அதிகாரச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் சுதந்திர சமூக சேவைகள் ஒழுங்கமைப்புப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மன்றம் அவ்வாறானதொரு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.

**3.	நிதிசார் மீளாய்வு**

**3.1	நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 419,289 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 371,363 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 47,926 அதிகரிப்பு ஏற்பட்டது. மீளாய்வாண்டினது வருடாந்த அங்கத்தவர் கட்டணம் வருமானம் ரூபா 93,500 அதாவது 16 சதவீதம் அதிகரித்திருந்தமை மேற்படி அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும்.

**4.	செயற்பாட்டு மீளாய்வு**

**4.1	செயலாற்றல்**

2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு

(அ)	புவிச்சரிதவியலுடன் தொடர்புடைய அறிவைப் பெறுதல், பரப்புதல் மற்றும் அறிவுப் பரிமாற்றம் என்பன.

(ஆ)	புவிச்சரிதவியல் விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சியுடனான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

(இ)	நானாவித தரங்களது அங்கத்துவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக விண்ணப்பதாரர்களது தகைமைகளைப் பரிசீலித்தல்.

(ஈ)	அதன் தொழில்சார் நடவடிக்கைகளை நிர்வகித்தலும் அதன் சாதாரண செயற்பாடுகளது உயர் தரத்தைப் பேணுவதற்கு உதவியளித்தலும்.

(உ)	புவிச்சரிதவியல் தொழில்சார் நடவடிக்கைகளுக்குரிய சகல காரணங்களின் போதும் தொழில்சார் மற்றும் நெறியுடனான கொள்கைகள் மற்றும் நியமங்கள் என்பவற்றை மேம்படுத்தலும் பேணுதலும் செயற்படுத்தலும்

(ஊ)	புவிச்சரிதவியலாளரது அபிலாஷைகள் மற்றும் நிலைமையை முன்னேற்றுதலும் மேம்படுத்தலும்.

(எ)	நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமான நடவடிக்கைகளின்போது புவிச்சரிதவியலையும் தொடர்புபடுத்தி அது தொடர்பான விடயங்களில் அரச மற்றும் தனியார் துறைக்குச் சேவைகளை வழங்குதல் மற்றும்

(ஏ)	நிறுவகத்தின் நோக்கத்தை முன்னேற்றுகையில் இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் அது போன்ற தொழில்சார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

மேற் குறிப்பிட்ட நோக்கங்களை ஈடேற்றுவதற்கு 2015 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட கீழே விபரிக்கப்படும் செயற்பாடுகள் மீளாய்வாண்டிலும் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருந்தன.

(i)	புவிச்சரிதவியல் அறிவைப் பெறுதல், பரப்புதல் தொடர்பாக அமைக்கப்பட்ட வெப் இணையதளம் தொடர்பாக அங்கத்தவர்களுக்கு அறிவூட்டி, பரப்புதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) புவிச்சரிதவியல் விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி ரீதியான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் மார்க்கமாக பட்டய புவிச்சரிதவியலாளரைத் தெரிவு செய்கையில் அவர்களது ஆராய்ச்சிக்கான விதி முறைகள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) அங்கத்தவர்களைத் தரப்படுவதற்கென நியமிக்கப்பட்ட அனுமதித்தல் மற்றும் நெறிமுறைக் குழுவினூடாக (Admission & Ethical Practices Committee) மீளாய்வாண்டின்போது 12 இணை அங்கத்தவர்களும் 22 பட்டயப் புவிச்சரிதவியலாளரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(iv) புவிச்சரிதவியலாளரின் அபிலாஷைகள் மற்றும் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் மேம்படுத்தலுக்கு தெரிவு செய்யப்பட்ட 22 பட்டயப் புவிச்சரிதவியலாளரினூடாக நாட்டின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைளின்போது புவிச்சரிதவியலுடன் தொடர்புபடுத்தவும் அதனோடு தொடர்புடைய விடயங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் குறித்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 நவெம்பர் 16 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அங்கத்தவர் கட்டண வருமானத்தைக் கணக்கிலிடுவதில் நிலவிய நலிவுகளைத் திருத்துவது தொடர்பாக மேலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.